1990 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோயில்களுக்கு வருகிற பெண்களுக்குப் பாதுகாப்புத் தர பெண் காவலர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஒரு வேளை பெண் அறங்காவலர்களைச் சேர்த்தால் அவர்களுக்கு ''அறங்காவலிகள்'' என்று பெயர் வைக்கப்படுமா! (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தங்களின் யோசனையைப் பரிசீலனை செய்வோம்.

அமுதம் அங்காடி துவங்குதல்.

* *3901*—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உணவு மற்றும்கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, மரக்காவலசை கிராமத்தில் ஒரு அமுதம் அங்காடி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

9-40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பகுதி நேர கடை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரக்காவலசை கிராமத்தில் பகுதி நேரக் கடை திறக்கப்பட்டு இருக்கிறது என்பதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தக் கிராமத்திலே நிரந்தரமான அங்காடி அமைக்கவேண்டும் என்று கேள்வி கேட்டிருக்கிறேன். தற்காலிகமாக பகுதி நேரக் கடை தான் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சேதுபாவாசத்திரத்தில் ஒரு கடை இருக்கிறது. அது 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மேலும் அங்கே சுமார் 500, 600 கார்டுகள் இருக்கின்றன. எனவே தனியான நிரந்தரமான அங்காடியை அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியைச் சேர்ந்த சேதுபாவாசத்திரத்தில் தொடக்கக் கூட்டுறவு அங்காடிகள் நடத்தும் நியாயவிலைக் கடையில் 984 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் மரக்காவலசை, கோடி வயல் மற்றும் காரங்குடி ஆகிய கிராமங்களை உள்ளடக்கி 375 குடும்பக் கார்டுகள் தான் இருக்கின்றன. எனவே தான் இப்போது தற்காலிகமாக ஒரு பகுதி நேரக் கடை அமைக்க

அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது தொலைதூரத்தை ஆய்வில் எடுத்துக்கொண்டு செய்யவேண்டும் என்பதுதான். ஆகவே அங்கே நிரந்தரமான கடை வைக்கவேண்டும் என்றுதான் கேட்கிறேன். அதுதான் என்னுடைய கேள்வி. அங்கே நீங்கள் துவக்கிவிட்டீர்கள், மகிழ்ச்சி. ஆனால் அதேநேரத்தில் மரக்காவலசை கிராமத்திற்கும் காரங்குடி, கருமங்கடாவிற்கும், சேதுபாவாசத்திரத்திற்கும் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே மரக்காவலசை கிராமத்தில் நிரந்தரமான கடை வைத்தால் நிச்சயமாக அந்தப் பகுதி மக்கள் பலன் பெற வாய்ப்பு இருக்கிறது. எனவே, கார்டுகளை மட்டும் கணக்கிடாமல் மக்களின் நடையையும் கணக்கில் கொண்டு அதாவது தொலை தூரத்தையும் கணக்கெடுத்து பரிசீலித்து அங்கே தயவு செய்து நிரந்தரமான கடை வைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே நியாவிலைக்கடை இருக்கக்கூடிய கிராமம் 3.5 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. எனவே, அதைத் தனியாகப் பிரித்து அங்கே ஒரு நிரந்தரமான கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம் அது வையபிள்-ஆக இருக்காது. தொடர்ந்து நட்டம்தான் ஏற்படும். இதையெல்லாம் மனதில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் திருப்திப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுடைய வேண்டுகோளுக்காக பகுதி நேரக்கடை ஒன்றை அங்கே திறப்பதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நவீன அரிசி ஆலை.

*5153—திரு கே. பிச்சாண்டி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் நெல் உற்பத்தியில் தமிழ்நாட்டில் 3-வது இடத்தை வகிக்கிறது. அதிக